உளி- 1 | ஓசை-72 | ஏப்ரல்-2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

•

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

வேலணையூர் ரஜிந்தன் - 4
கோ. பாரதிமோகன் - 5
ரா.ராஜசேகர் - 6
கலிபூ - 7
குகை சிவா - 7
பிரபுசங்கர் க - 8
அ.சீனிவாசன் - 9
மா. காளிதாஸ் - 9
கலைச்செல்வி -10
அன்றிலன் -11
கி.சரஸ்வதி -12
காயத்ரி ராஜசேகர் -12
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் -13
நயினார் -13
வீரமணி -14
அன்பு மணிவேல் -15
மகிழினி காயத்ரி -16
சுடா. முத்துக்குமார் -17
சுரேஷ்பாபு ராசேந்திரன் -18
தங்கராஜ் பழநி -19
சு.ஆனந்தகுமார் -20
சகா -20
முகமது பாட்சா -21
மகேஷ் சிபி -21
பூங்கோதை கனகராஜன் -22
ஐ.தர்மசிங் -22
சித்ராபுபேஷ்குப்தா -23
கௌதம் கனவுகள் -23
தி. கலையரசி -24
மஹறா பர்வீன் -25
கா வெங்கடேஸ்வரன் -26
எஸ்தர் ராணி -27
கா.ரஹ்மத்துல்லாஹ் -28
சுப்பையா கந்தையா -29
க. அய்யப்பன் -29
கரு.கிருஷ்ணமூர்த்தி -30
நேசன் மகதி -30
மு.முபாரக் -30
ப்ரியா ரஞ்சன் -31
ஜோதி சரண் -31
கவி. விஜய் -32
தங்கேஸ் -33
தீபிகா சுரேஷ் -34
மேகலா செந்தில் குமார் -34
விஜி கல்யாணி -35
த.முருகன் -35
கா. ந. கல்யாணசுந்தரம் -36
செ.புனிதஜோதி -36
தமிழ்குமரன் -36
ம.கனகராஜன் -37
ம.சக்திவேலாயுதம் -38
ராஜாஅபி -39
கவி ரகுமான் -39

# கடவுச்சொல்



யார் யாரோவெல்லாம்
“மறதி பிடித்தவன்”
“மறதி பிடித்தவன்”
என்றவனை
வசை வார்த்தை
பேசுகையில் எல்லாம்
ஏதோவொரு தயக்கம்
இனம் புரியாத பதட்டம்
வருங்காலம் பற்றி
மேலிடும் ஏக்கம்
அவ்வப்போது அவனது
ஆழ்மனதை எட்டிப்பார்க்கும்

ஆனால் அது அடுத்த கணமே
மறந்தும் போய்விடும்
அவன் தான்
தனது முக்கிய
ஆவணங்களுக்கெல்லாம்
அவள் பெயரைக்
கடவுச் சொல்லாக்கிவிட்டானே!

மறதியையே மறக்கடிக்கும்
ஞாபகமல்லவா..
அவள் முதற்காதல்

◆ *வேலணையூர் ரஜிந்தன்*



இதயத்தில் விரிந்திருக்கிறது
கட்புலனகா நோய்மையின் பேருரு

தொற்றியக் கணம் தொட்டே
உயிரை இலக்காக்கி முன்னேறும் இதன்
கருப்பை
ஆதித்தொன்மத்தில் விரிந்தது

இரட்டை நாக்கை உணர்ச்சித் திரிகளாக்கி
கனிவனத்தை இறுக்கியதில் பற்றிய தீ
நொறுக்கிய தனிமையில் பூத்த
மனித மந்தையின் தாபவேட்கையில் நாற்றானது
மறுநோய்மை

இடையறாது பிரதிமையுறும்
இந்நோய்த் தொற்றுக்கு
கரும்பு வில்லாளியின் கைவண்ணமே காரணி
என்பதை ஊரறியும்

உலகே மையலுற மாய்க்கும்
முதற்பாவ நோய்க்கு
அதனிடமே மருந்திருப்பதுதான்
கண்வழி பரவும் தொற்றின் பேரதிசயம்

◆ *கோ. பாரதிமோகன்*

# பூனையின் புரிதல்



சாக்கில் கொண்டுவந்ததைக் கொட்டினார்
பிள்ளையார் கோயில் அருகில் தூங்கும்
குப்பைத்தொட்டியில்
உடலும் குரலும் நடுங்கியபடி
அந்தப் பாட்டி

எகிறிப் பாய்ந்து
வெளியில் வந்து விழுந்தது
ஒரு வெள்ளைப்பூனை
குப்பைக் கொட்டிய அதிர்வடங்குமுன்

வேகமாகச் சென்ற சைக்கிள் இடைவெளியில்
எல்லாப்புறமும் பார்த்துவிட்டு
காற்றாய்ப் பாய்ந்தது
கோயில் நோக்கி

யார்யாரோ வந்துபோயினர் தெருவழியே
பூனையின் மீதான பார்வைக்கீற்றுக்கூட படாமல்

பிள்ளையாருடன் உரையாடலில் பூனை

இங்கிருந்துதானே எடுத்துச் சென்றனர் உன்னை

ப்ரிய நக்கல் சிரிப்பில்
பிள்ளையார்

பூனைக்கு ப்ரியம் மட்டுமே
புரிந்தது எப்போதும்போல

◆ *ரா.ராஜசேகர்*



என் பேத்திக்கு
என் மகளின் சாயல்.

என் மகளுக்கு
என் அம்மாவின் சாயல்.

என் அம்மாவுக்கு
என் பாட்டியின் சாயல்.

என் பாட்டிக்கு
என் பூட்டியின் சாயல்.

என் பூட்டிக்கோ
நம் பூமியின் சாயல் ...

◆ *கவிபூ*

எப்போதும் சந்தோஷமாக
இருப்பதாகவே
காட்டிக் கொள்கிறேன்
என் முதல் சோகமே
இதுவரை யாருமதை
கண்டுபிடிக்கவில்லை
என்பது தான்

◆ *குகை சிவா*

# பொட்டு காவியம்



7
வயதின் அளவை
சொல்லாமல் காட்டும்
கமல் பட குறியீடு.....

6
இருந்தால் பகல்
இல்லாவிட்டால் இரவு
அவ்வளவுதான்
தலைவனின் நாள்.....

5
இரகசியங்களை செவியறியும்
முத்தங்களை நீ அறிவாய்.....

4
மோக மூட்டத்துடன் இருக்கும்
அவள் வானத்தின்
முதல் பெருக்கல் குறி......

3
ஒவ்வொரு திருவிழாவின் போதும்
உலா வரும் அம்மனுக்கு
உன் மீது தான் பொறாமை
இதை தெரிந்து கொள்ளாமல்
எத்தனை நேர்த்திக்கடன்கள்??

2
குட்டி மகளை
ஒற்றை வினாடியில்
தாயாக்கும்
திருஷ்டி மாயம்.....

1
அத்தனை நவீனங்களையும்
காணாமல் போகச் செய்யும்
நேனோ அஸ்திரம்.....

10
முற்றுப்புள்ளி மட்டுமே
வைத்துக்கொண்டு
கவிதை அந்தஸ்து
வாய்க்கப்பெற்ற
ஒரு துளி கவிதை.....

9
முத்தம் வாங்கி
முத்தம் வாங்கி
சிவந்து போன
சிவப்பு வெட்கம்.....

8
எப்போதும் உன்னோடு
ஒட்டியிருக்கும்
என் மினிமலிசம்.....

*பிரபுசங்கர் க*



ஒரே மாதிரி
உடற்கூறு
உடலியல்
வளர்சிதைமாற்றம்
இனப்பெருக்கம்
பிறப்பு இறப்பு
என்பதைத் தெரிந்திருந்தும்
எல்லா மனிதனும்
ஒன்று என்பதையே
ஏற்றுக்கொள்ள மறுப்பவன்

இருந்தாலும் இல்லாவிட்டாலும்
எல்லா கடவுளும்
ஒன்று போலத்தான் என்பதை
எப்படி
ஒத்துக்கொள்ளப் போகிறான்!

◆ *அ.சீனிவாசன்*

முத்தம் துப்பாக்கி ரவை
நீ விசையை அழுத்த
சத்தமின்றி உயிர்த்தெழுகிறேன்.
பழகிய பின்னோக்கு விசையால்
வெண்குருதியாய்ச் சொட்டுகிறது அன்பு.
பசுமையான நம் வயலில்
தாழப் பறக்கின்றன கொக்குகள்.
ஒருநிமிடம் அதிர்ந்து அடங்கியதாய்ப்
போக்குக் காட்டும் வெளியில்
மறுபடி அழுத்து விசையை.
ஆணவத்தோடு
நாம் நிகழ்த்தும் முத்தக் கொலைகள்
வைரலாகட்டும் எல்லா இதயங்களிலும்.

◆ *மா. காளிதாஸ்*

# சின்னதும் பெரியதும்



நான்கு நாட்களாகியும்
நன்றாக இருக்கிறாயா
நல விசாரிப்பு
முகத்துக்கு முன் ஒலித்துக் கொண்டே இருக்கிறது

நன்றாக இருக்கிறேன் என்று ஓயாமல்
சொல்லிக்கொண்டிருக்கிறேன்...

ஒரு சின்னப் பொய்
பிரியமுள்ள மனிதர்களுக்கு
அத்தனை பெரிய சந்தோசத்தை கொடுக்கிற
வித்தை இப்படித்தான் போலும்..

◆ *கலைச்செல்வி*



பஞ்சு மிட்டாய் விற்பவனின்
மணியோசை பிடித்துப்போக
அவனிடமிருந்த
ஒரு பஞ்சு மிட்டாயை வாங்கி
நாவிற்குச் சுவைக்கத் தருகிறேன்.
சற்றுநேரத்திலெல்லாம் நாக்கு
பிங்க் நிறமாக மாறத்தொடங்கியது

இன்னும் விற்றுத்தீரா
தனது வாழ்வுக்காக
பழங்கள் விற்கும் கிழவியிடமிருந்து
நாவல் பழங்களை வாங்கி
அதில் இரண்டைச் சுவைத்ததும்
இப்போது நாக்கின் நிறம்
ஊதாவாக மாறியிருந்தது

காட்டுவழிப் பயணத்தின்போது
சப்பாத்தி கள்ளிப்பழத்தில்
நட்சத்திரவடிவ முள்ளை
நீக்கிவிட்டு
சுவைக்கத் துவங்கியதும்
நாக்கு
சிவப்பு நிறத்திற்கு
மாறியிருந்தது

இப்படித்தான்
மனிதனின் நாக்கு
ஒவ்வொரு சுவையில்
ஒவ்வொரு நிறத்தைப்
பூசிக்கொள்கிறது.

◆ *அன்றிலன்*

# பிரிதல் நிமித்தம்



மீச்சிறு புள்ளியில் தொடங்கிய ஊடல்
பிரிவின் நீர்ப்பிடிப்பில்
வேர் விட்டுப் படர்கிறது
என்றேனும் இணைவதான
நம்பிக்கை சருகாக மாறி இலக்கற்றுத் திரிகிறது
பசுமையாய் அன்பு துளிர் விட்ட பொழுதில்
இலைகளுக்கெல்லாம் பூவின் நிறம் இருந்தது
பழையதாய்ப் போன பேரன்பின்
வாசனை மட்டும் நீங்காது
சுற்றியபடியே இருக்கிறது
காதல் செடியை

◆ *கி.சரஸ்வதி*

கோடை வெம்மையின்
கடைச்சொட்டு நீரையும்
அண்ணாந்து பருகும்
அனிச்சை
ஏதோவொரு நாளில்
உன் முகம் பருகும்
என் கண்களுக்கு.

◆ *காயத்ரி ராஜசேகர்*



உயிர் அடங்கியதாக
மருத்துவர் உறுதி செய்தாலும்
உடம்பின் சூடு அப்படியேயிருக்கிறது
‘ஓ’வென்ற அழுகைகளினூடாக
நெருங்கிய உறவுகள்
ஒவ்வொருவருக்காக சொல்லப்பட்டு
ஃப்ரீசருக்கு சொல்லப்பட்டு
ஷாமியானாவுக்கு சொல்லப்பட்டு
குளுப்பாட்டுவதற்கான வேலைகளென
அடுத்தடுத்து பரபரக்கின்றன
இத்தனைக்குமிடையே
கிசுகிசுத்தலுக்குப்பின்
“அந்த நாய்க்கெல்லாம்
தகவல் சொல்ல வேண்டாம்”
யாரோ தகிப்பில் கத்த
அதுவரையிருந்த கதகதப்பு அடங்கி
ஜில்லிடத் தொடங்குகிறது உடல்...

◆ *வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்*

பாழடைந்த வீட்டில்
வெயில் காய்ச்சி குடியேறுகிறது..
கொடி.

◆ *நயினார்*



மறுகித்தவிக்கும்
நீயற்ற நாளொன்றின்
தனிமையில்
அத்தனை தடுமாறுகிறேன்

பற்பசைக்கு
சவரக்களிம்பை
பிதுக்குகிறேன்

சர்க்கரைக்கு
உப்பிட்டு கரிக்கிறேன்

இடம் வலமாக
மாற்றி அணிந்த
காலணிகளில்
இடறுகிறேன்

மகிழுந்தின்
திறவுகோலால்
இருசக்கர வாகனத்தை
இயக்க முயற்சித்து
தோற்கிறேன்

காதல் வேண்டாம்
கருணை வேண்டாம்
எந்த பணிவிடைகளும்
தேவையில்லை தேவி

மீனுறையும் நீரைப்போல்
உடன் இரு போதும்

◆ *வீரமணி*



தூங்க முடியவில்லை
காக்கை குருவிகளின் சத்தம்
கூட்டியள்ளி மாளவில்லை குப்பைகளையென்று
அலுத்துச் சலித்துக்கொண்டு
வாசலில்
நிழலுலர்த்திக் கொண்டிருந்த
புங்கையையும்
வேங்கையையும்
கூலிக்கு ஆளமர்த்தி
வேரோடு தூரோடு
பிடுங்கியெறிந்த
எதிர்வீட்டுக்காரம்மா...

இரண்டொரு நாளில்
அமாவாசைச் சோற்றுக்கு
எட்டிப்பார்க்காத காக்கையையும்
உள்வீடு வரைக்கும்
மல்லாந்து கிடந்த வெய்யிலையும்
திட்டித் தீர்த்து
நெட்டி முறித்துக் கொண்ட போது...

மருந்துக்கும் கூட
தென்படவில்லை
மரத்தை வெட்டிச் சாய்த்த
விசனம்.

◆ *அன்பு மணிவேல்*



நீங்கள் இருந்த
அதே இடத்தில்தான்
இப்பொழுது
நானும் இருக்கிறேன்
உங்கள் காலடித்தடம்
ஒன்றின்
நிழலில் இளைப்பாறுகிறேன்

இந்த நள்ளிரவில்
மணக்கும்
நுணாப்பூக்களின்
வாசத்தை
என் கைகள்
அனிச்சையாய்
அணைத்துக்கொண்டிருக்கிறது

ஒரே ஒரு சின்ன வெளிச்சத்தைப்
படரவிட்டிருந்தக்
காலத்தைப்பார்த்து
அதீத நம்பிக்கையோடு
புன்னகைக்கும்
கண்கள்தான்
வேண்டுமெனக்கு
இப்போது

அடர்ந்த மௌனத்தைக்
கிழிக்கும்
சொல்லொன்றை
மட்டும்
கையளியுங்கள் போதும்

வேறெதுவும்
பேசிவிடாதீர்கள்

வேர்களால் வாழும்
காட்டு மல்லிகள்
மழையை மட்டும்
நம்பியிருப்பதில்லை.

*மகிழினி காயத்ரி*



தேவரீர்
நாங்கள் செய்வது
இன்னதென்று அறிந்தே
செய்தோம்

பெண் குழந்தையின்
பருவத்தைத் தாளவியலாத
தகப்பன்கள் நாங்கள்
வெண்மையின் மணத்தைச்
சுமக்க முடியாத புனிதர்கள்

எங்கள் பாவங்களைக்
கழுத்துவரை முடித்துவிட்டு
முகம் வரையத்
தடுமாறிய போதுதான்
கடவுளைப் போல நீ வந்து சேர்ந்தாய்

வரலாறு
பொங்கியெடுத்த சோற்றில்
ஒரு பருக்கை
நீ

கேல்வரியில் ஒரு சிலுவை
தள்ளிக் கிணற்றை மூட ஒரு கல் பலகை
ஜோதிமயமாக்க ஒரு தீக்குச்சி
தயாராய் இருந்தது
இப்போதும்

பிதாவே
உன்
எலும்புகளை
உருவி முடிக்குமுன்
உயிர்த்தெழுந்து விடாதே
பாவமன்னிப்பு நாற்காலியில்
இன்னும் ஒரு கால்
செய்ய வேண்டியிருக்கிறது.

◆ *சுப. முத்துக்குமார்*

# முதலும் முடிவும்



கடைசித் துளியும்
நீர்த்துப் போன
நதியின் சுடு மணல்

பாலையின்
கள்ளிமுள் முலை சுரந்த
கடைசி பனித்துளி

இறுதியாய் விட்ட
மொட்டையாவது
மலரச் செய்திருக்கலாம்
அழுகும் முன் ஆணிவேர்

வெளிரிக் கொண்டிருக்கும்
நதிப்படுகையில்
இரவின் இறுதி இருள்

கால்கள் இல்லை
சிறகுகள் இல்லை
பறத்தல் என்பது
உயிர்வதை ரணம்
கழுகின் கூர்நகம் பற்றிய
பாம்பு

கடைசி நரை முடியும்
உதிர்ந்த இரவில்
ஒற்றைக் கடைவாய் பல்லும்
விழுந்த முதுமை

முதல் எல்லாவற்றிற்கும்
முடிவுண்டு
முடிந்தவற்றிக்கு
முதல் தேடும் உலகு.

◆ *சுரேஷ்பாபு ராசேந்திரன்*

# ஒரு நானும் இன்னொரு நானும்



என்னைப்போலவே எனது
இன்னொரு நான்
என் வாழ்க்கையில்
இருந்திருந்தால்
முடிவுகளெடுக்க நான்
ஒருமுறைக்கு
இரண்டுமுறை யோசிக்க
வேண்டியதில்லை
நான் என்னிடம் மட்டுமே
ஆலோசனைகள் கேட்பேன்
கண்ணாடி பார்க்கும்
அவசியமிருக்காது
எந்த வேலையையும் நான்
பாதி சதவீதம்
மட்டும் செய்தாலே
போதும்
என்னிடம் மட்டுமே நான் கோபப்படுவேன்
என்னிடம் நானே மன்னிப்பு கோரும்
எதிர்பார்ப்புகளிருக்காது
என்னிடம் எனக்கு
நம்பிக்கை துரோகத்திற்கான
ஏமாற்றங்களிருக்காது
என்னிடம் எனக்கு எந்த
ரகசியங்களுமில்லை
என் சந்தோசங்களையும்
துக்கங்களையும்
பகிர்ந்து கொள்ளவும்,
என் தலை கோதவும்,
என் கண்ணீரைத் துடைக்கவும்,
என்னைத் தேற்றவும்
எனக்கு நானே இருப்பேன்
துயரங்களின் பார்வையில் படாதவாறு
எனக்குப் பின்னால் நான் ஒழிந்து கொள்வேன்
நான் என்னை விட்டு விலகுவதுமில்லை
என்னை நான் என்றும்
கைவிடுவதுமில்லை
என் இதயம் நொறுங்கிப்
போனாலும்
எனக்காகத் துடிக்க
என் இன்னொரு நானின்
இதயமிருக்கும்...!

◆ *தங்கராஜ் பழநி*



கடைசி நிமிடத்தில்
ஆள் குறைகிறதென..
தேவதைகள் நடனத்திற்கு
நிறம் காட்டி ஒதுக்கிய அம்முக்குட்டியை
ஆசிரியர் ஆண்டுவிழாவிற்கு
மேடை ஏற்ற வேண்டி வந்தது.
அம்முக்குட்டியின் ஆட்டம் பார்த்து அரங்கம்
அதிர ஆசிரியைக்கு புரிந்தது திறமைக்கு நிறம்
தடையில்லையென..
ஆ..வென ஓடிச்சென்று
ஆசிரியருக்கு  முத்தங்கள் பொழிந்ததில்
புரிந்தது.. எல்லா நிற தேவதைகளும் அன்பு
பொதுமறையென்று..

◆ *ச.ஆனந்தகுமார்*

ஊதி ஊதி
வயிறு பெருத்துப்போன
பலூன் வியாபாரிக்கு
நுரையீரலில் நீர் கோர்த்ததும்
ஊதினால் ஆபத்தென்ற நிலையில்
இன்று,
காற்றுப் போன பலூனாக
மெலிந்து கிடக்கின்றார்...
தொண்டைக்கும் நெஞ்சுக்குமாக
ஓடிக் கொண்டிருக்கும்
மிச்சக் காற்றில்
நூலில் கட்டிய ஆப்பிள் பலூனாக
ஊசலாடுகிறது
உயிரும் பலூனும்...

◆ *சகா*



முட்டிமோதி விழும் பறவைக்கு
நிலைக்கண்ணாடி ஒரு பிரபஞ்ச மாயை...
தொட்டி மீன்களை
வெறித்துப் பார்க்கிறது வளர்ப்புப் பூனை.
பளிங்கு புத்தனுக்கு
பவிசு மாளிகை பதமிழந்து போக....
அரவணைப்பென்பது அநாகரீகமாகிறது..
அக ஒழுக்குப் பாத்திரம் பிடித்தவர்களின்
இரவின் சூதாட்டத்தில்
இடறும் சீட்டுகளை நம்பி
இடை நெளியும் சிங்காரியுடன் கூடாரத்தில்
நுழைகிறது
ஒட்டகம்.

◆ *முகமது பாட்சா*

நடன அசைவுகளை
மேடையில் மறந்துவிட்டு
நின்று யோசிக்கும் குழந்தை தான்
அந்த நடனத்தை கவிதைக்குள்ளாக்கிவிட்டு
நாணி நிற்கிறது

◆ *மகேஷ் சிபி*



சிறுதுளி விழும் மழைத்துளிக்காக
காத்திருக்கிறது சிப்பி
பறவை தேடிய இரையை
சிந்தாமல் தன் குஞ்சின் சிவந்த வாயில் ஊட்டி
விடுவதைப் போல கவனமாக
விடிகிறது பொழுது
நானும் காத்திருக்கிறேன்
மனதை நிரப்பும் நறுஞ்செய்திகளுக்காக

◆ *பூங்கோதை கனகராஜன்*

1.பின்வாங்கும் மாடு
முன்னோக்கி பாய்கிறது
கரைபுரளும் ஆறு...

2.அணை கடந்த வெள்ளம்
தெருநாயை எழுப்புகிறது
படியேறும் குளம்...

3. மனிதனின் கருமித்தனம்
பதுங்க ஆரம்பிக்கிறது
வளர்ப்புப் பூனை...

◆ *ஐ.தர்மசிங்*



மழலையின் சிரிப்பில்
தன் அத்தனை வலிகளையும்
மறந்த தாயின்
மனதிற்கொப்பாயிருக்கின்றது...
நீ என்னை
அதீத மகிழ்ச்சியில்
ஆழ்த்திவிடும் அக்கணம்...
அப்போதெல்லாம்
என் உணர்வின் சொற்களுக்கு
சிறகுகள் வளர்வதில்லை...
மாறாக
வால் முளைத்து
நாய்க்குட்டியொன்றாய்
என் காலடியில்
படுத்துறங்கவே செய்கின்றது ...

◆ *சித்ராபுபேஷ்குப்தா*

யாரோ ஒருத்தியின்
தலையிலிருந்து
தவறி விழுந்து
மிதி பட்டுக்கொண்டிருந்த
ரோஜா பூ ஒன்றை
முதுகிலேற்றிக்கொண்டு
ஊர் சுற்றிக்காட்டுகிறது
மழை.

◆ *கௌதம் கனவுகள்*



என் கண்களுக்கு மட்டும்
வானவில்லாகத் தெரிகிறாய்
ஆனால் உன் மழை என்னவோ
ஊராருக்குத் தான்...

காதல் பரீட்சையில்
பூஜ்ஜியத்தையே விரும்புகிறேன்
உன்னை கற்றுக்கொண்டே
இருப்பது தானே
வாழ்க்கை.

நீ என் ரகசியப் பாதை
காலத்தின் பயணம் எங்கு முடியுமென
இருளுக்குத் தான் வெளிச்சம்.

உன்னை வரையும் போது
காலத்தின் மை கசிகிறது
என் கண்ணீர் அதனை
எப்படியோ சமன் செய்து விடுகிறது.

கவிதைகள் முடிய முடிய
வார்த்தைகள் பிறந்து கொண்டே
இருக்கின்றன.
என் ஆயுள் ஏடுகள் முழுவதிலும்
காதலின் ஜீவிதம்....

◆ *தி. கலையரசி*



முக்கு ரோடு
சின்ன வேம்போடு முருகன் கோயில்..
நிழலே அண்டாத பஸ் நிறுத்தம்..
வெத்தல பாக்கோட செட்டியார் பொட்டிக்கடை..
வாடகைக்கு ஜாஸ்மின் சைக்கிள் வண்டி..
அரசியலுக்கு மேரியக்கா டீக்கடை..
வெளியூரு சனங்களுக்கு பொன்னையா மெஸ்..
காய்கறி இறைச்சி தவிர்த்து
எல்லாம் கிடைக்கிற நாடார் கடை....
அம்மைக்கு பார்க்கும் மீனாம்மா வீடு...
இடியாப்பம் விற்கும் ஜெயிலானிமா...
வெயிலுல தென்னந்தட்டி விற்கும் பாட்டி...
பன்னீர் அண்ணே காயிலான் கடை ...
நாயக்கர் மாமி விறகு கடை...
சோடாக் கம்பெனிக்காரவுக வீடு..
செங்கல் சேம்பர் மாமா வீடு...
வெள்ளாவிக்கு பேரு போன வெள்ளையம்மா வீடு ...
கைமாத்துக்கு பட்டாளத்துக்கார பேச்சியம்மா வீடு...
கடைசியா பாம்பாட்டிகாரவுக வீடுனு
இத்தனை அடையாளங்களோடு இருந்த வீதி...
இப்ப மொத்ததுக்கு ஒரே பெயரோட
மேம்பாலமா நிக்குது.

◆ *மஹறா பர்வீன்*



அவளின் உயிர்நுனி
உன்னதமானது
ஒரு துளியை..........
மார்சுரக்க

என் உயிர்மடி
சில்லிடும்
ஈன்ற பொழுதின்
அவளது பெருவலி.

தீதும் தித்திக்கும்
வரிகள் இல்லா கவிதை
சுவரின் அருகே மகள்
கையில் கரித்துண்டு.

கொஞ்சிய மனம்
கொஞ்சம் அஞ்சும்
பருவம் பதினாறு.

அழையா...........
விருந்தாளியானது
கடன்
மகளின் திருமணம்.

தீயின்றி குளிக்கிறேன்
வெந்நீரில்
பேரனின் மூத்திரம்.

பூக்கள் சிரிக்க
அழுகுரல் சத்தம்
என் மரணம்.

◆ *கா வெங்கடேஸ்வரன்*



எப்போதும் தனிமையில் இல்லை நான்
வள்ளுவன் தினமும் வந்து போவார்
அழத் தோன்றினால்
இருக்கவே இருக்கிறது
மாயா ஆங்கிலூவின் மடி
உடன் வந்து விடும்படி ஓயாமல் கூப்பிடுகிறாள்
சில்வியா பிளாத்
பல் துலக்குகையில் பாரதிக்கும் சேர்த்தே பல் விளக்கி
விடுவேன்
போரடித்தால்
அவளின் நினைவுகளை
அகன்ற பாத்திரத்தில் நிரப்பி
முகத்தை மூழ்கடிக்கிறேன்
சுவருக்கு ஒரு பல்லி
எச்சிலற்ற முத்தங்கள் தருகின்றன
யார் சொன்னது
நான் தனிமையின் தனியளென
ஆறு சிலந்திகளில்
மூன்றாம் இலக்கமிட்ட சிலந்தி
பூப்படைந்திருக்கிறது

-

◆ *எஸ்தர் ராணி*

# வழி தொலைத்த பரிசில்கள்



ஒருகரை தொடங்கி
மறுகரை வரைதான் பயணம்.
திசையறிந்து
துடுப்பொன்று நீரைப் பிளக்க
நீந்துகிறது பரிசல்...

அது நன்னீர்தான்.
கண்ணீரின் உப்புக்கரிப்பை
அவன் முகம் கழுவும் போதெல்லாம்
அதுவும் சுவைத்திருக்கக் கூடும்...

மனதை
இலகுவாக்குவதற்கென்றே எங்கெங்கிருந்தோ
மனிதர்கள் அங்கு சூழ்ந்திருக்க
பரிசல்காரனின் மனதுமட்டும்
வீட்டில் பருவமெய்தி அமர்ந்திருக்கும்
மகளைத்தான் அசைபோட்டுக்கொண்டிருக்கிறது...

அந்த நீரலைகளில்
தனது துயரும் நகர்ந்து நகர்ந்து
மறுகரை சேருமென்பது
அவனது நீண்டநாள் கனவு.

பாவம்
மனிதர்களை இறக்கிவிட்டுத் திரும்புகையிலும்
அந்த
நீரலைகளைப் பார்த்தபடிதான் கரையேறுகிறான்.

அடிக்கும் வெயிலும்
உடலை உருக்கும் உருக்கமும்
அவனுள் பயத்தை விதைக்கிறது.
குடியிருக்கும் வாடகை வீட்டுக்கூரை
எத்தனை இடத்தில் ஒழுகுமென்று
யோசிக்கும் போது நீரலைகளை
மறந்து நடக்கிறான்...

அவன் இயக்கும் பரிசல்
சரியான திசையில் பயணித்து
சரியான திசையில்தான் திரும்புகிறது.
அந்த ஏழைமகனின் கனவுப் பரிசலோ
கனவில் மட்டும்தான் இலக்கடைகிறது.
கண்விழித்துப் பார்த்தால்
கரை தெரியாமல் கரைக்கான வழிதெரியாமல்
நீரலைகளை ஏற்படுத்தியபடி நகர்கிறது.

வாழ்வுப் பரிசலின்
சிதிலமடைந்தப் பகுதிகளைப்
பார்த்துக்கொண்டிருக்கும்போதே
துடுப்பின்
பெயர்ந்துவிட்ட ஓரங்களைக் காட்டுகிறது காலம்.
மூழ்குவதையும் மீள்வதையும் எண்ணிப் பார்க்கையில்
தூரத்தில் பெருவெள்ளமொன்று வருவதற்கு
அறிகுறியாய்
நீரோட்டம் அதிகரிக்கிறது.

இந்த
வழி தொலைத்த பரிசல் என்ன செய்யும்.?
இல்லாத மகிழ்வை எதிர்பார்த்தபடி
இருக்கின்ற வலியை நொந்தபடி
ஏதோவொன்றின் வரவுக்குத்தான் காத்திருக்கும்.
ஆளில்லா நேரங்களில்
கரைகவிழ்ந்துக் கிடக்கும் பரிசல்களைப் போலல்ல.
காட்டாற்றில் சிக்கிக்கொண்ட
ஆதரவற்றதொரு பரிசலைப்போல்...

◆ *கா.ரஹ்மத்துல்லாஹ்*

# பேரன்பு



கருத்து வேறுபாட்டில்
வடக்குப்பார்த்து நிற்கும் அவளும்
தெற்குப்பார்த்து நிற்கும் நானுமான
உங்களுக்கான காட்சியானது
பெரும் மோதலின் குறியீடாக
உங்கள் கோண தோற்றப்பிழை.
அன்புப்போதையில் லயித்து
எவர் முதலில் திரும்புவாரென
சுவாரசியமாக
ரசிக்கக் காத்திருக்கும் எங்கள்
ஒருவருக்கொருவர் மட்டுமே தெரியும்
எங்கள் இருவர் பிடரிக்கண்கள்
உங்கள் கண்களுக்கு தெரிவதில்லை

◆ *சுப்பையா கந்தையா*

பின்னிரவுக்குள்
நொடி முள் பயணிக்கும் வேளை
சாலையில் காய்கறிகாரர்களின்
கூவல் சற்றே வேகமெடுக்கிறது
சப்தங்களால் இரவை கிழித்து
தொங்க விடுகிறார்கள்
கடந்து செல்பவர்கள்
கையில் ஊசியும் நூலும்
இருப்பதாக நம்பி '
எதையாவது வாங்கி
தைத்து விடத்தான் வேண்டும்
கிழிந்து தொங்கும்
காய்கறிகாரர்களின் இரவை.

◆ *க. அய்யப்பன்*

# ஹைக்கூ



இரவு நேர பயணம் /
நேர் எதிர் திசையில் வரும் /
முழு நிலா /

◆ *கரு.கிருஷ்ணமூர்த்தி*

பகலில்
வெளியில்
ஆட்டம்போட்டுவிட்டு
இரவில்
வீட்டிற்குள் வந்து
படுத்துக்கொள்கிறது
வெயில்!

◆ *நேசன் மகதி*

புத்தனைப் பற்றிய
கவிதைக்கு
புன்னகைத்தவர்கள்,
யசோதரா பற்றிய கவிதைக்கு
மௌனமாய் கடந்துபோகிறார்கள்!

◆ *மு.முபாரக்*



நீள் சதுரத் தொட்டியில்
நீந்தி வசிக்கும் மீனுக்கு
கடலின் வடிவம் செவ்வகம்!!

உருண்டை வடிவ ஜாடியில் காலந்தள்ளும் மீனுக்கு
கடல் என்பது வட்டம்!!

கண்டதே காட்சி கொண்டதே கோலமாய் தொட்டி
மீன்கள்
கிணற்றுத் தவளையின்
வறட்டு கத்தல்களாய்
தம் நியாயம் உரைக்கும்!!

கரைகாணக் கடலில் இருந்து
ஆழ்கடலின் அமைதியுணர்ந்த
கயல்கள் சிக்கிக் கொள்வதில்லை
வடிவம் எனும் வலைக்குள்!

◆ *ஜோதி சரண்*

பூக்கும் பூக்களையெல்லாம் பறித்துவிடுகிறீர்கள்
வண்ணத்துபூச்சிகளை பிடித்து கைக்குள்
முடக்கிக்கொள்கிறீர்கள்
முயல்களை காதுகளால் எடை போடுகிறீர்கள்
மயிலிறகுடைத்து செவி சுழற்றுகிறீர்கள்
தட்டாம்பூச்சிகளின் தடம் மறிக்கிறீர்கள்

பாசப்பூஞ்சோலை எனப்பெயரிடுகிறீர்கள்.......

◆ *ப்ரியா ரஞ்சன்*

# அதே நிலா



.
அவசரப் பயணம்
எதுவும் பேசாமல்
பூவைக் கசக்கும் சிறுமி.

.
துறவியின் கையில்
மெல்ல விடுபடும்
செடியின் கிளை.

.
மழையில் ஒலிக்கும்
கோவில்மணி
ஐஸ் வண்டிக்காரனைத் தேடும்
குழந்தை.

.
விளக்கு அணைத்ததும்
கலைகிறது
வண்ணத்துப்பூச்சியின் தவம்.

.
விளக்கிடம்
என்ன வேண்டுதலோ
சுற்றும் விட்டில்கள்.

.
காற்றடிக்கும்போது
நாணலின்மேல் தெரிகிறது
மலையின் முகப்பு.

.
இடத்திற்கேற்ப பல்வேறு
உணர்வுகளைத் தருகிறது
அதே நிலா.

.
இருசக்கரப் பயணம்
விழிப்புடன் நகர்த்துகிறது
சில்வண்டுச் சப்தம்.

.
வீதிப் பள்ளத்தை
ஒளியூட்டிக் காட்டுகிறது
சிறகிழந்த மின்மினிப் பூச்சி

.
பௌர்ணமி நிலா
இரவு முழுக்க
இரசிக்கவைக்கிறது கொசு.

.
உறங்கும் குழந்தையின்
இமையில் கோர்த்திருக்கும்
கண்ணீர் துளிகள்.

.
அமைதியாக இருக்கிறது
பழுத்த இலைகளை
உதிர்த்த மரம்.

◆ *கவி. விஜய்*

# ஒரு கடவுச் சொல்லாக



ஒரு கடவுச்சொல்லாக என்னை மனதில் இருத்திக்
கொள் பிரியமே

வேண்டும்போது நான்
உன் அகத்தை திறப்பேன்
மயிலிறகினைப் போன்ற
மந்திரக் கோலால் தொட்டு
மாயா ஜாலங்கள் நிகழ்த்துவேன்

வானவில்லும் கருமுகிலும்
இன்று உன் கனவில்
உன்னை அணைத்துக் கொள்ளட்டும்

பிரியமென்னும் நீரைகுடிக்க
தவி தவித்து சாகும் கடைசிபயணியிடம்
யட்சனைப் போல்
கேள்விகள் கேட்டு நிற்கிறது
இந்த வாழ்க்கை

உனக்கான பதில்கள் எனக்குள்
தான் பொதிந்திருக்கின்றன தோண்டிஎடுத்துக்
கொள்வாய்

தாகமோ சாவைப் போல ஆளை
குடிக்க காத்திருக்கிறது
முதலில் அதை தீர்த்து விடு

இந்த கொடிய பாலையிலும் பிரார்த்தனைக்கு
செவிமடுத்து
சில எளிய மலர்கள்
ஆங்காங்கே பூத்த வண்ணமே இருக்கின்றன
அது போதும்

ஒரு கடவுச்சொல்லாக என்னை மனதில் இருத்திக்
கொள்
உனக்காக நான்
அந்த கடவுளையே அழைத்து வருவேன்

◆ *தங்கேஸ்*



மழை கண்டவுடன்
யார் யாரோ
என்னை அழைக்கிறார்கள்
நான் அழைப்பது
உன்னைத் தான்

மழையை தவிர
எல்லாம் பேசுகிறாய்
நானும்
ஏன்
அழைத்தேன்
என்பதைத் தவிர
எல்லாம் சொல்கிறேன்

கைகொட்டிச்
சிரிக்கிறது
மழை
முன்னிலும்
கனமாய்.

◆ *தீபிகா சுரேஷ்*

என்னை
அழைக்க மறந்த
உன் அலைபேசியோடு
அத்தனை நேரங்களையும்
கடத்திக்கொண்டிருக்கும்
உனக்கு;
எப்படி தெரியாமல் போனது என்
அலாதிப்பிரியங்கள்,,,,,

காரணங்களாயிரமிருந்தாலும்
கடந்து போக துணிவில்லாமல்
கடத்திப் போகும் உன்
ஞாபகங்களோடு நகர்ந்து
கொ(ல்)ள்கிறது என் நாட்கள்

என் பிரியங்களை பூக்கச்செய்யும்
உன் நினைவுகளோடான
கிறுக்கல்களை
நேரமிருந்தால் வாசித்து விட்டு செல்,,,,,,

வார்த்தைகளிலாவது வாழட்டும்
நம் பிரியங்கள்..........!

◆ *மேகலா செந்தில் குமார்*

# வலி



ஓட்டு வீட்டுக் கூரை இடுக்கில் முடங்கிக் கிடக்கும்
மாதவலி..

முதுவலி பின்னலில்
முனங்கும் அணுக்களின் வேதனை..

அலறித் துடிக்க நினைக்கையில் அடக்கி வைக்கிறது
அம்மாவின் வைராக்கியம்.. ..

போகிற போக்கில் வீசிச் செல்லவியலாத
மனயிறுக்கம்..

இரும்பு மனுசிகளின் உதிரச் சொட்டுகள் சிந்திய
தினங்கள்..

எண்ணிக் கொண்டிருக்காத நாழிகைகள்..

களைப்பு தீர உறங்காத அவளிடம் கண்டதைத்
தேடுகிறேன் என் மகளிடம்..

◆ *விஜி கல்யாணி*

கிடையில் ஆடு
வெளியே சுற்றி சுற்றி வருகிறது
குள்ளநரி!

◆ *த.முருகன்*



அவ்வப்போது
மடக்கி/ ஆளப்படுகின்றன /
சலூன் கத்திகள் மட்டும்.

◆ *கா. ந. கல்யாணசுந்தரம்*

துரோகம்,பிரிவு,கோபம்,சோகம்
அத்தனை
வெளிப்பாட்டிலும்
கவிதையை
எழுதுவதைவிட
அன்பின்
வெளிப்பாட்டில்
எழுதிப்பாருங்கள்
வாழ்தல்
அவ்வளவு
சுகமாய்
தோன்றும்

◆ *செ.புனிதஜோதி*

தலைவிதி
தலை வீதியாக
எங்கு சென்றாலும்
எஞ்சி நிற்கின்றன
முட்டுச்சந்துகள்!?

◆ *தமிழ்குமரன்*



பௌர்ணமி வெளிச்சத்தோடு
தேவதை ஒருத்தி
பூக்களை விற்பதாக
செய்தி வந்தது
இரவெனும் போதையில்
நான் தள்ளாடும்பொழுது
கை நிறைய விண்மீன்களை
விதைத்த
கனவுதான் அது
எல்லையற்ற மகிழ்ச்சியில்
பட்டென்று விழித்தால்
இந்தக் கனவும் உதிரக்கூடும்
என்ற பயம் எனக்குள் பூக்க
இமைமூடியே
உலா வருகிறேன்
இக்கனவின் குகைக்குள்ளே
தங்கச் சிறகுடன் வானம்பாடிகள்
ஒரு புறம் வானத்தை வரைய,
மறுபுறம் தன் இறகால்
வீணை மீட்டுகிறது தென்றல்
இந்த அழகிய தருணத்தில்,
தலையா பூவா
என்ற சிறுவர் விளையாட்டு போல்
பிஞ்சு விரல்களால்
என்னை நானே சுண்டுகிறேன்
தனியாய்
நிகழ்தகவுக்கொப்ப
சில நேரம் தலையெனஇரவாகிறேன்
சில நேரம் பூவெனப்பகலாகிறேன்
உண்மையில்,
சூரியோதையமும் அஸ்தமனமும்
கைக்கோர்த்து நாட்டியமாடும்
என் ஆரஞ்சுப்பொழுதுகள்
என்றும் தாழிடப்படாத
வசந்தக்கதவுதான்

தட்டாமல்
தயங்காமல் உள்ளே வரலாம்
வெளிச்சப் பூக்களை விற்கும் தேவதையாய்
நீ மட்டும்

*ம.கனகராஜன்*



மலிவு விலைக்கு
என்னைப் பலர்
வாங்க முற்படும் போதெல்லாம்
நான் விலை போனதேயில்லை...

நல்ல விலைக்கு
கேட்கப்படும்போதே
நான் அதிகமாய்
விற்கப்பட்டிருக்கிறேன்!

நான் விலை மதிப்பற்றவனென்று
ஒவ்வொருவரும்
எனை வாங்குவதும் விற்பதுமாக
என் வாழ்க்கை கழிகிறது!

அதனால் துளியுமெனக்கு
எந்தப் பயனுமில்லை..
எஜமானர்கள் மட்டுமே மாற்றம்
அவர்களின் மனோபாவம் அதுவே!

யார் பெற்ற பிள்ளையோ
அவன்..
எனக்கு எஜமானரானான்!
என்னோடு பேசினான்...

'நீ அரிய பொருளாய்
ஒவ்வொருவராலும் வாங்கப்பட்டாய்..
நான் அறிந்த பொருளாய்
அவனால் வாங்கப்பட்டேன்' என்றான்!

உன் வணிக வாழ்வு
இன்றோடு
நிறைவுறுவதாக
எனைப் பார்த்து மொழிந்தான்!

இப்போது உங்களுக்கு
காட்சிப் பொருளானேன் நான்...
அவனுக்கோ
காதல் பொருளானேன் நான்!

*ம.சக்திவேலாயுதம்*



இங்கு
தேவதைகளுக்கு
பஞ்சமில்லை

நீ
தேவதையை
தேடுகிறாய்
நான்
அதன் இறகை
தேடுகிறேன்

◆ *ராஜாஅபி*

சக்கரத்தில் எலுமிச்சை /
பலியிடப்படுகிறது /
ஆடு

ஊர் சனம் /
வடம் பிடித்தும் அடம் பிடிக்கும் /
தேர்

நாதஸ்வர ஓசை /
மனையின் அரியணையில் /
முதியவர் ஆராத்தியுடன்

பழங்கோயில்கள் /
பாதுகாக்கப்படுகின்றன / தேக்குமரச் சிற்பங்கள்

◆ *கவி ரகுமான்*


RN BALAJI PRODUCTION
FILMING IN PROGRESS...
PADAIPPU PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP - MARUTHA NAYAGAM BOSE - MUSIC - DEV PRAKASH
EDITING -TAMILARASAN - CHOREOGRAPHER - ABU&CHALAS - PRO - NIKIL MURUGAN
CO PRODUCERS - MOHAMED ALI JINNA.M - SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY-BALAJI NEDUNCHEZHIYAN